ACL-FTS 00157

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# அறிவானந்த நெஞ்சறி வுறுத்தல்.

திருத்துருத்தி இந்திரபீடம்
கரபாத்திர சுவாமிகள் ஆதீனம்
ஸ்ரீமான்
தண்டறை சுப்பராய ஆசாரிய சுவாமிகள்
மாணாக்கர்களில் ஒருவரும்

மதுரை, ஸ்ரீ மீனாம்பிகை பிரஸ் மானேஜருமாகிய
எஸ். கந்தசாமி பிள்ளையவர்கள்
இயற்றியது.

மதுரைத் தமிழ் வித்வான்
ஸ்ரீ-நா. கிருஷ்ணசாமி நாயுடவர்களால்
திருத்தம் பெற்று,

மதுரை, ஸ்ரீமீனாம்பிகைப் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

காப்பிரைட்.] 1926. [விலை அணா 2.

# முகவுரை.

"அறிவானந்த நெஞ்சறிவுறுத்தல்" என்னும் பெயரிய இந்நூல் திருத்துருத்தி இந்திரபீடம் கரபாத்திர சுவாமிகள் ஆதீனம் ஈசூர் சச்சிதானந்த ஆசாரிய சுவாமிகளது உபதேச பரம்பரை மாணவரும் எமது சற்குருவுமான தண்டறை ப்ரம்மஸ்ரீ சுப்ராய ஆசாரிய சுவாமிகளிடத்து யாம் அநுக்கிரகம் பெற்றுக்கொண்டபடி பலவேதாந்த நூல்களின் சிரவணார்த்த நிமித்தமாய் அனுபவித்தறிந்துள்ள எதார்த்த ஞானத்தை அனுபவித்தறிந்தாங்கு எமது மனதுக் கறிவுறுத்துவான் பொருட்டு எடுத்தியம்பிய ஒரு செய்யுட் சிறு நூலாகும்.

"அறிவானு!மறிபொருளுங் கூடியகூட் டரவிலெழு மறிவானந்தம், பிறியாத வான்மதத் துவத்தெழுந்த தாமதனைப்பேணல் செய்வாம்" என்ற மகா வாக்கியப்படி விழிப்பில் அறிவும் விழிப்பொழிவில் ஆனந்தமும் பிறந்து விளங்கிக்கொண்டிருப்பது ஒவ்வோராான்மாவின் அனுபவ மாதலால், அவ்விரண்டும் ஏகமாக விளங்குவதுதான் நனவிற் சுழுத்தி என்றும், இம்மையிலே முத்தி என்றும், சர்வ துக்க நிவர்த்தி என்றும், பரமானந்த பிராப்தி என்றும், கிருதகிருத்திய மென்றும் பிராப்திப் பிராப்பிய மென்றும் வேதம் முறையிடுகின்றமையான். அதனை அருட்குருவாகிய சற்குரு முன்னிலையில் முமுட்சுக்கள் தெளிவுபடுத்திக் கொள்ளுதலே இந்நூலின் முடிவாகும்.

இனி வித்துவான்களும் வேதாந்திகளும் நந்தமிழ் நாட்டில் மிக்குளாரென்பினும் அவர்களுள் தொல்காப்பியம், நன்னூல், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய சிலபல சங்க நூல்களோடு வித்வான்களும், கைவல்யம் பகவற்கீதை, ஞானவாசிட்டம் பிரமகீதை, சங்கரபாடியம் முதலிய பலபல ஞான நூல்களோடு வேதாந்திகளும், ஆராய்வாராகின்றனராகவே வித்துவத்துக்கு வேதாந்தமும், வேதாந்தத்துக்கு வித்துவமும் தம்முள் ஒருங்கமையப் பெறுவது அதிதுர்லபம் என்பது எமது அனுபவம் பற்றி ஏதோ அறிவுநூன் முதுமொழிச் செய்யுட்களில் எமக்குள்ள

முதிர்ந்த பாடத்தின் சாதக முயற்சியினுல் யாப்பிய லறிந்தாங்கு இத்திரு விருத்தங்களை யாமியற்றப் புகுந்தபடியால் இவற்றுளே தும் வழுக்களிருக்கு மென்றெண்ணி இதனை இலக்கண வல்லாரொருவரிடமீய்ந்து திருத்தப் புகின் அது ஒருவேளை ஞானுர்த்த சித்தத்திற்கு முரணுண்டாய்விடுமென்ற துணிபு பற்றி எமது சற்குரு பரம்பரையில் இப்போழ்துள்ள பெரியார் மாட்டு அனுப்பி வித்து அவர்களது பார்வையின் மீது வெளிப்படுத்தலாமென்றே கருதி இருந்தேம். இங்ஙனம் யாம் கருதியாங்கு செய்தற்குச் சில அசந்தர்ப்பத்தினுல் முடிகூடாது போகவே இந்நூலை எமது நண்பர் ஸ்ரீமான். இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன் அவர்களது பிரஸ் மாநேசரும் எமது மா நேசருமாகிய, மதுரைத் தமிழ் வித்வான். ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடவர்களிடமாவது கொடுத்துத் திருத்திப் பார்க்கலாமென்ற ஒரு நோக்க மெழுந்தது. அங்ஙனமே செய்ய அவர் அன்புடன் பெற்று இந்நூல் முழுதும் நன்காராய்ந்து ஞானுர்த்த சித்தத்துக்கு ஒரு சிறிதும் முரண்படாது அதனினும் மேலாய்ச் சொல்நயம் பொருள்நயம், சந்தநயம், ஓசைநயம் முதலியனவுங் கருதிச் சிலபல விடங்களில் திருத்திக்கொடுத்தது எமக்கொரு திருத்தி கொடுத்தது. ஆகவே அன்னவர்க்கெமது நன்றி அறிதல் கடப்பாடுடையதாம். மேலும் இத்தகை நூல்களியற்றவும் முன்னோர் நூல்களிற் சில முயன்றுபதிப்பிக்கவும் தெய்வந் திருவருள் கூட்டுமாறு இறைஞ்சுகின்றேமாக.

இங்ஙனம்

எஸ். கந்தசாமி பிள்ளை,

மானேஜர்,

ஸ்ரீமீனும்பிகை பிரஸ், மதுரை.

# சாற்றுப் பாக்கள்.

பிர்மஸ்ரீ பிர்மானந்தஸ்வாமிகளுடைய
பாதசேவகரு ளொருவரான

## ஸ்ரீ சிவானந்தஸ்வாமி அவர்கள் இயற்றியவை.

உலகநூல் கற்றுங்கற்ற தோர்ந்துபின் னறிவுநூல்கள்
பலபல கற்றுங் கற்ற பக்குவ நிலையில் நின்றுன்
சிலசில சொற்றுன் எங்கள் செல்வமார் கந்தசாமி
புலமைசார்ந் திடுதற் கிந்நூல் போதிய ஞானமாமே;

பற்பல ஞானநூல்கள் படிப்படி நெடுநாள்கற்ற
விற்பன ரானபேர்கள் விதிமுறை யடைந்த ஞானம்
அற்புத அறிவானந்த நெஞ்சறி வுறுத்தலாமித்
தற்பரநூலே யோர்கால் தரமுறை கற்றோர்க்காமால்.

ஸெயிண்டு மேரிஸ் ஹைஸ்கூல்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்,

## ஸ்ரீ மு. கோவிந்தசாமி ஐயரவர்கள் இயற்றியவை.

வேதமுடி யென்றுரைக்கும் பத்துவகை
யுபநிடதம் விரிந்த போரில்
வாதமுறு மருச்சுனற்குக் கண்ணனுரை
கீதைமுதல் வகுத்த நூல்கட்
காதிகுரு சங்கரனூர் மொழிந்திட்ட
பாடியமு மயனூர் கீதை
போதமுறு வாசிட்ட முதலியவுங்
குருமுகமாய்ப் புகலத் தேர்ந்தே;

கேட்டலொடு சிந்தித்த லாதியவை
நாடோறுங் கிளரக் கொண்டு
வாட்டமறக் கொண்டவறி வானந்த
வனுபவத்தை மனமே தேறக்
காட்டியறி வுறுத்திடுவான் தண்டமிழிற்
செய்யுளாக் கனிந்து சொற்றுன்
ஊட்டியநன் மதியூக முடையகந்த
சாமியெனு முண்மை யோனே.

---

மதுரைத் தமிழ்ச்சங்க வித்வான்,

ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் இயற்றியவை.

ஊழன்றித் தான்தனித்திங் கொன்றையொன்றுய்க்
கருதாமல் உற்று நோக்கில்
பாழன்றி இச்செகத்தைப் பார்த்தவர்யார்
அதனைநனி பார்த்துப் பார்த்துத்
தாழன்றித் தன்னுருவைத் * தான்கண்டறி
* வானந்தநெஞ் சறிவுறுத்தல்
கிழன்றி நாமுய்யக் கந்தசாமிப் பனுவல்
கிளத்திற் றம்ம.

தாம்பிகைக்கும் மலம்மாயை தள்ளியறி
* வானந்தநெஞ் சறிவுறுத்தல்
பாம்பிகைக்கும் பழுதையன பார்ப்பவனும்
பார்ப்பனவும் பரமொன் றென்றே
சாம்பிகைக்கும் மலர்த்தேனைக் கண்டுநுகர்
மதுகரம்போல் கற்றுன் நம்மீ
ளும்பிகைக்கும் * தலைவன்கந்த சாமியென்பான்
வாய்மலர்ந்தா னறிஞர்க் காமால்.

---

* இவைகள் மெல்லொற்றடுத்த காய்ச்சீர்களென்ப.

ஓம்
பரப்பிரமணே நம:
திருச்சிற்றம்பலம்.

# அறிவானந்த நெஞ்சறி வுறுத்தல்.

## கணபதி துதி.

### வெண்பா.

மங்களமா யாதியாய் மற்றொன்று மின்றியொளிர்
துங்கமிகு வானந்த சோதியாய்—எங்கும்
குணவடிவாய் ஞானக் குருவடிவாய் நின்ற
கணபதிதா னொன்றேயெங் காப்பு.

பற்பல வாகத் தோன்றிநின் றொடுங்கும்
பார்வையை யகற்றியே யுள்ள
தற்பத வறிவா னந்தமெ னெஞ்சிற்
சதமென விளங்கிடத் தீர்க்க
சொற்பன வுலகந் தோன்றுதற் கிடமாஞ்
சூழுணர் வென்றுமோங் காரக்
கற்பனை வடிவாக் கருத்தினிற் றுலங்குங்
கணபதி யுருவையுட் பணிவாம்.

## சுப்பிரமணியர் துதி.

புரமது மூன்று மெரிதர நின்ற
போதமே தன்னுரு வான
பரமன தருளே யறுமுகப் பொருளாய்ப்
படியின்மீ துதித்துமப் பரர்க்குத்
திரவறி வதனைத் தெரிந்துகொள் வாய்நீ
திடமிதில் வேறிலை யென்று
துரியநன் னிலையைப் போதனை செய்த
சுப்பிர மணியரைத் துதிப்பாம்.

## கடவுள் வணக்கம்.

கரியறு முகன்கா லம்பொரு ளிடமாய்க்
கருத்தினி லெட்டுதற் கரிய
பெருவெளி யாகிப் பலபல வாகப்
பிறப்பிறப் புருவமாய்த் தோன்றும்
அரியய னரனுய்த் தாவர மீறு
யாகிய மாயைதான் கடந்து
உரிமையாய் விளங்கு மொளியுணர்வதனை
உளத்தினி லென்றுமே வைப்பாம்.

## குரு வணக்கம்.

அண்டமெலாந் தன்னுருவ மாகி மேலா
யதற்கப்பா லொன்றுடனு மொன்று தாகிக்
கண்டபொரு ளெல்லாமா யல்ல தாகிக்
காணுதபொரு ளெல்லா முள்ள தாகி
விண்டநிலே யொன்றினுமே பற்று ஞான
விண்ணுகி விண்ணுளே யினிமை யான
தண்டறைசற் குருசுப்ப ராய தேவைச்
சச்சிதா னந்தமெனப் பணிவோம் யாமே. (1)

சச்சிதா னந்தமென நிற்கு மொன்றைச்
சந்தேக மடம்போக்கிச் சாதிப் போர்க்கே
அச்சமுறு மெழுவகையாந் தோற்ற மாதி
அகன்று சுத்தத் திரிபுடியும் விருத்தி மூன்றும்
உச்சிதமாய் விளங்குபுரு டார்த்தம் நான்கும்
ஒருமூன்று காண்டமது மொருங்கே தோன்ற
இச்சையிலாத் தண்டறைசற் குருவாய் வந்திண்
டெடுத்துரைத்த வுணர்வெளியைத் துதிப்போம் யாமே

எடுத்துரைத்த வுணர்வெளியை யன்றி யென்றும்
எப்பொருளு மெவ்விடமுந் தோற்ற மென்றே
அடுத்தரிய வுபதேசஞ் செய்த தோடு
மறிவறியா வாதார விளக்க மொன்றுங்
கொடுத்தவகப் புறமெனுமா ராய்ச்சி யொன்றுங்
கொளத்தக்க வகம்பொருளாம் விளக்க மொன்றுந்
தடுத்தவிருள் புருடார்த்த போத மொன்றுந்
தந்தசுப்ப ராயனருட் பணிவோம் யாமே. (3)

வெண்பா.

சோதனையில் மீந்த சுகவுணர்வே நீயதுதான்
சாதனையிற் பாரென்று சாற்றினான்—போதனையில்
வல்லசுப்ப ராயகுரு மாசொன்று மில்லாதான்
நல்லவன்று ளொன்மகுட நாடு.

அவையடக்கம்.

மதமெலாங் கடந்து மறைமுடி யுணர்ந்து
மன்மது தெளிந்தவான் றோர்முன்
பதவறி வின்ப நெஞ்சறி வுறுத்தல்
பாடினேன் குருவரு ளதனால்
குதலைவாய் மொழியைக் கேட்டதாய் தந்தை
கொண்டக மகிழ்வது போன்றே
இதயமு மகிழ்வா ரின்பமு மடைவார்
ஏற்புடை மாதவர் மன்னோ.

அதிகாரியும் பயனும்.

கலக்கமே வடிவாம் பிறப்பிறப் பான
காட்சிக ளேதெனக் கெனவே
துலக்குவ தெந்த நானெனத் தேடித்
துயருட லினிவரா வண்ணம்
இலக்கணை மூன்றோ டருளுஞ்சற் குருபா
லேற்றிந்த நூற்பொருள் வினவில்
அலக்கணோ டிலகு முடலுல குண்மை
அன்றெனத் துலக்குவார் நெஞ்சே.

## நூல்.

### எழுசீர் ஆசிரிய விருத்தம்.

அறிவினி லசைவே அளவிலா மதமாம்
அவைகளே அவரவர் வழக்காம்
அறிவைவிட் டகலா வம்முடி வவைகள்
அறிவின தெழுச்சியென் றுணரும்
அறிவுடை யோரே ஞானியென் றுரைக்கும்
அருமறை வாக்கிய முடிவை
அறிந்துன துளத்தி லென்றுமே வைப்பாய்
ஆனந்த மேவிய நெஞ்சே. (1)

அறிவினி னின்றே யறிவறி யாமை
அளவிலா வடுக்கது வாகும்
அறிவினிற் பிரியா வவ்வடுக் கதனை
அறிவுரு வாகவே பார்க்கில்
அறிவறி யாமை யனைத்தையுங் கடந்தோ
ரானந்த மாகவே தோன்றும்
அறிவுரு வான வருட்குரு தன்னு
லானந்த முணர்குவாய் நெஞ்சே. (2)

ஆனந்த மான தன்னிலை யகன்றுங்
கவித்தையே யுருவம தான
ஆனந்த மல்லா நாமரூ பத்தில்
அழுந்திநீ மயங்கவே வேண்டாம்
ஆனந்த மான வருட்குரு நாதன்
அறிவையே யையமி லாமல்
ஆனந்த மேநீ யறியெனப் புகன்றுன்
அறிந்துபே ரின்புறு நெஞ்சே. (3)

ஆனந்த மான வருட்குரு நாதன்
அறிவொன்றே யினிமையாய்க் காட்ட
ஆனந்த மான வவ்வறி வதனில்
அழுந்திநீ யின்படை யாமல்
ஆனந்தமாறித் துன்பமே வடிவாம்
ஆக்கையை நானென மதித்தாய்
ஆனந்த மின்றிப் பவத்திலே னுழன்றீங்
கல்லலை யடைகிறாய் நெஞ்சே. (4)

அறிவுடை யோர்க ளறிவின தின்ப
மகலவே யிலையெனக் காண
அறிவுடை யாரெல் லாமுடை யாரென்
றருட்குற ளதனில்வள் ளுவனார்
அறிவிலா ரெல்லா முடையரா யிருந்து
மானந்த மிலையென வுணர
அறிவுடை யதிகா ரத்திலே வைத்தார்
அறிந்துநீ யுய்குவாய் நெஞ்சே. (5)

அறிவின துருவந் தாகமாய் நிற்கும்
ஆனந்தம் வாழ்வதாய் நிற்கும்
அறிவின தசைவே யல்லலாய்த் தோன்றும்
ஆனந்த மமைதியாய்த் தோன்றும்
அறிவின தினிமை யளவிட முடியா
தனுபவ மெவ்வித மெனிலோ
அறிவின தசைவு வோய்ந்தவக் கணமே
அறிகிறா யனுதினம் நெஞ்சே. (6)

உலகமும் யாமும் வருவதெப் படியென்
றுணர்வுடை யோர்களை வின்வில்
உலகமும் யாமும் வருவதே யிலையாம்
உணர்வினோர் மாறுத லென்பார்

உலகமும் யாமு மாய்ந்துமே பார்க்கில்
உணர்வுரு வாய்முடி வதனுல்
உலகமும் யாமும் விட்டுமே விடாத
வுணர்வையே யுள்ளதென் றுணர்வாய். (7)

உலகமு முயிரும் சாக்கிர மதனில்
உருவம்போல் தோன்றியே நிற்கும்
உலகமு முயிரும் சொப்பன மதனில்
ஒளிருமோர் சாயைபோல் நிற்கும்
உலகமு முயிரும் சுழுத்தியா மதனில்
ஒன்றுமே யிலையென மாயும்
உலகமு முயிரும் தினமனு பவத்தில்
உண்மைபோல் மூன்றுரு வாமே. (8)

மூவுரு வதனை யாய்ந்துமே பார்க்கில்
மூதறி வாகவே விளங்கும்
மூவுரு வதனி லொன்றுமே விளங்கா
மூதறி வதனைவிட் டாங்கு
மூவுரு வாக விருக்குமிப் பொருள்கள்
மூதறி வாகுமே யன்றி
மூவுரு போலி யாகவே முடிந்து
மூதறி வுண்மையா குமரோ. (9)

மூன்றுரு வினுக்கும் சாட்சிய தான
மூதறி வுள்ளதாய்த் துலங்கும்
மூன்றுரு வதனைத் துயருரு வென்பார்
மூதறி வதிதத்தில் நின்ருேர்
மூன்றுரு வாக மயக்கா லத்தில்
மூதறி வொன்றுமே துலங்க
மூன்றுரு வுண்மை யன்றெனத் தெளிந்து
மூதறி வொன்றையே காண்பார். (10)

ஒப்புயர் தாழ்வ தொன்றுமே பொருந்தா
உயர்பத மானவப் பரத்தில்
பொய்ப்பொரு ளான சிற்சட சத்தி
பொருந்தின தெவ்வித மெனிலோ
கற்பளிங் கியினில் பலவித வர்ணம்
கலந்துமே தோன்றுதல் போன்று
மெய்ப்பொரு ளான வெளிபுணர் வதனில்
வெறியுல கிருக்குமாம் நெஞ்சே. (11)

காலமும் பொருளு மிடமுமே யாகக்
காண்குதல் நினதனு பவமாம்
காலமும் பொருளு மிடமுமா ராய்விற்
காரண காரிய மாகும்
காலமும் பொருளு மிடமுமே விடுத்துக்
காரிய காரண மாய்ந்தால்
காலமும் பொருளு மிடமுமே யின்றிக்
காண்பதவ் வறிவொன்றும் நெஞ்சே. (12)

அணுமகத் தாகப் பொருளிடங் காலம்
அறிவினிற் கலந்துமே தோன்றும்
அணுமகத் தாகக் கலந்துமே நிற்கும்
அப்பொரு ளிடமதாங் காலம்
அணுமகத் தின்றி நிரந்தர மாக
அறிவொன்றே நிற்குமெக் காலும்
அணுமகத் தான பொருளிடங் காலம்
அறிவினிற் கரைந்துபோம் நெஞ்சே. (13)

அணுமகத் தான வுடலுல கின்றி
அறிஞர்கள் முத்தியை யடைந்தார்
அணுமகத் தின்றி யுணர்வினை யடைய
அறிவின்றி யேன்மலை கின்றாய்

அணுமகத் தென்றே யுடலுல கதனை
அகற்றியே யினிமைய தான
அணுமகத் திறந்து விளங்குவாய் நெஞ்சே
அருட்குரு நாதன்சொற் படியே. (14)

இருக்குமிவ் வுலகு துன்பமா மதைவிட்
டிவ்வறி வதனையே குறிக்க
இருக்குவே தந்தான் முடிவிலே ஞானம்
இன்புரு பிரமமென் றுரைக்கும்
இருக்குமிவ் வுணர்வைச் சிந்தனை செய்தே
இவ்வுல கனுபவம் நீக்கி
இருக்குமிவ் வுணர்வே யின்பமா மிதைவிட்
டின்பிலை யென்றுகொள் நெஞ்சே. (15)

ஞானமே பிரம முரைத்தது முதலில்
நான்பிரமம் புகன்றதவ் விரண்டில்
ஞானமே பிரமம் நான்பிரம மிரண்டாய்
நவின்றவவ் வாக்கிய மூன்றில்
ஞானமே விடாமல் நீயது வதுநீ
ஞானமா யிருக்கிறு யென்றும்
ஞானமே யெல்லாம் பிரமம தென்றும்
நவின்றதவ் வதர்வண வேதம். (16)

கானலில் நீரும் கயிற்றினி லரவும்
கனவினில் நகரும்பொய் யதுபோல்
நானென வுடலை நமதென வுலகை
நவின்றுநீ கிடந்துழல் கின்றுய்
போனதும் பிறவி புகுந்தது மினிமேல்
புகவரு வதுங்கணக் கில்லை
ஆனது தெரிந்தே யைம்புல மறுத்தீண்
டறிவின்ப மாயிரு நெஞ்சே. (17)

### வேறு

உலகும் பரமும் முடலும் முயிரும்
முணர்வா யதிலொன் றுமிலை யெனவே
பலகா லுணரும் மதிவந் ததனால்
பயமொன் றுமிலா வறிவின் பம்வரும்
சொலவே முடியா வதிலே பிறவித்
துயரென் பதுவுங் கெடுமே முழுதும்
நிலைவே றிலையென் றனனே குருதான்
நிகழ்வாய் யுடலம் விழுமுன் மனனே. (18)

ஒளியாய் வெளியா யுணர்வே யிடமாய்
உடலின் றியவின் பமதே பொருளாய்
உளமே யுதியா மதியா லுணர்வாய்
உலகென் றுமிலா வடிவே யுருவாய்
அளவின் றியகம் மதுவே றிலதாய்
அயர்வென் பதினின் றேநீங் கினதாய்த்
தெளிவா யழியா தினிதென் றுநிதந்
தெரிவாய் குருசொற் படியே மனனே. (19)

உணர்வின் றியணு முளதென் றுமிலா
துளதே தெதுவென் றுராய் வதினில்
உணர்வே வெளியாய் வெளியே யொளியாய்
ஒளியே யுணர்வா யகலா வினிதாய்
உணர்வா முயிருக் குளிருப் பிடமாய்
உளதா மறிவை யமிலா ததைநீ
உணரும் படிசொன் னனீ யதுவென்
றுயரெங் குருவந் தருளே வடிவாய். (20)

வேறு

அழியாத வின்ப மதுதா கமாகி
லறியாமை யாக வதுதான்
ஒழியாத மாயை யுடலாய் விளங்கு
மொருபோது மின்றி யுணர்வாம்
வழியால் முயன்று முடிவே யுணர்ந்து
மறையும் புகன்ற ததுவே
விழியா யறைந்த குருவாய் மைகண்டு
விடுவையம் நின்று நிகழ்வாய். (21)

வேறு

அருமாமறை முடிவாற்சுக மழியாவெளி யொளியா
யுரையாடிய படியேமதி யதுவாய்நிகழ் விதுதான்
குருவாரரு ளதனால்வரு மிதுவேயுறு தியதாம்
முரணும்பல வழியாலிது முடியாதிது முடியா. (22)

வேறு

அளவிலாச் சென்மமாக வறியாமை வடிவமாகித்
தளர்வொடு நின்றநின்னைச் சச்சிதா னந்தமான
வொளிவெளி யுணர்வே நீயென் றுயர்குரு நாதன்சொன்னான்
தெளியவே யையமின்றித் தேர்குவா யுணர்ந்து நெஞ்சே. (23)

எத்தனை கோடி கால மெவ்வித சித்தி பெற்றும்
முத்தியை யறியு ஞான முயற்சிசெய் தடையா விட்டால்
சுத்தமாய்ச் சாந்த மான சுகமது விளங்கா தென்றே
நித்திய மான வேத நிண்ணய மறிவாய் நெஞ்சே. (24)

உலகுடல் ரூப மென்றும் ஒன்றுமே யுண்மை யின்றென்
றலகிட லறிவு பேத மாகுமென் றளவில் வேதஞ்
சொலநின துருவ மான சோதியாஞ் சுகமே நீயென்
றிலகுவ துண்மை சொன்ன ரினியசற் குருநன் னெஞ்சே (25)

வேறு

இந்தவுல கின்பமிதென் றெண்ணியள வில்லாப்
பந்தமத டைந்தனுப வித்தல்விடு நெஞ்சே
வந்துகுரு நாதனுன தின்பமறி வென்றுஞ்
சொந்தவுரு வாகுமெனச் சோதியெனச் சொன்னான். (26)

அந்தவுரு நீயறிவ தாமொவொரு நாளும்
எந்தவித மாகினுநி யின்பவுரு நெஞ்சே
இந்தவுட லேதுமல தென்றுகுரு வாய்மை
தந்ததிது வேதமனு தானுமற வாதே. (27)

வாலவய தானதுயர் மாதரை மறந்து
மூலவடி வானகுரு மூர்த்தியை யடைந்து
காலவடி வாயிலகு ராப்பகலை வென்றால்
தூலவடி வேதுமிலை சுடரொளிநி நெஞ்சே. (28)

வேறு

இதயமிக் குகையி லென்றுமே ரசமா
யிருந்துதான் யாவையும் விளக்க
அதையுண ராதே யவத்தைமூன் றதனி
லல்லலே வடிவமா யுழன்றாய்
உதயமு மறைவு மொன்றுமே யின்று
முயர்குரு நாதனே யுன்னை
அதுவென விளங்கு மானந்த மென்று
ணுதலா லதையுணர் நெஞ்சே. (29)

வேறு

அறிவைவிட வேறு வடிவமதி லாத
அளவிலறி யாமை யிடராறா
குறியில்குறி யான வொருபிரம ரூப
குருவுருவ ஞான விழிபெறார்

பொறிபுலன லாது வழியதனி லேறிப்
புதிதுபுதி தான சுகமதே
சிறிதுசிறி தாக வடையவொரு போது
சிதறிமன மேநி யழிவுருய். (30)

மாயை யுருவாகி வால வயதான
மாதர் வடிவானு மோடியே
காய முதலான பார்வை நிசமாகக்
கால மொழியாம லாடினுய்
தூய வெளியான நாச மதிலாது
சூழு ணர்வை வேத மோதியுந்
தீய வுலகான பேத மதியாகித்
தீந ரகிலேனி வீழ்கிருய். (31)

வேறு

அறிவையே யினிமை யாக
வகத்திலே தெளியா வண்ணம்
புறமதே நாட்டம் வைத்துப்
புந்தியைத் துயர தாக்கிப்
பிறவியி லழுந்தி நீயும்
பேதையாத் திரிந்தாய் நெஞ்சே
குறியுட லென்றுந் துன்பங்
குறிக்கும்நீ யின்பந் தானே. (32)

வேறு

மண்ணுரு வதனைப் பெண்ணுரு வாக
மயங்கிநீ யேனுழல் கின்ருய்
உண்மைய தாக வருட்குரு சொன்ன
ஒருமொழி வாக்கியம் ஞானக்

கண்ணிணுற் காணி யென்றசொன் முடிவுன்
காதினில் வீழ்ந்துமே யின்னும்
திண்ணம தாகச் சிந்தைதா னெஞ்சே
தெளிவையே னடைகிரு யில்லை. (33)

ஒருபொரு ளான வுணர்வொளி யன்றி
உண்மையா யுலகுயி ரின்ருும்
பெருவெளி யதனி லுலகுயிர் பரமும்
பிரித்துமே சுகமனு பவிக்கில்
அருமறை யதனைப் போலியின் பெனவும்
ஐயந்தான் யாதொன்று மின்றிக்
குருவரு ளாலே யாய்ந்துண ரெனவும்
கூறிய முடிவறி நெஞ்சே. (34)

வேறு

தனதா முளமா மதையே வதைசெய்
ததனுல் முடிவா முணர்வே யுளதாம்
பினமா யொருவே தனையே துமிலாப்
பிறவா நெறியே யதுதா னினிதாம்
அனவா கனனே ப்ரமகீ தையினும்
அதுவே யழியாப் பொருளா மெனவுஞ்
சொனசொல் மறவே லொருபோ தினுமே
சுகமா யடைவா யதையே மனனே. (35)

வேறு

வந்தவு டல்மறை வாகுதல் முன்னஞ்
சொந்தசு கம்மதை யாய்ந்தறி வாய்நீ
எந்தவி தத்திலு மீதது நீயே
சிந்தனை கண்டுநி தேறுவை நெஞ்சே. (36)

வேறு

இச்சையென் பதினு லேயே யெழுபிறப் படைந்தா யந்தோ
நிச்சய மெதுவென் ருய்ந்தால் நிர்க்குண வடிவ மொன்ரும்
அச்சமே சொரூப மான வகமுடற் பாவந் தன்னைத்
துச்சமென் றறிவாய் நெஞ்சே சோதியாங் குருநோக் காலே.

வேறு

ஒருநான் மறையே முடிவே சுகமா
யுணர்வே யுளதா மெனவே சொனதை
குருவா லதையே திரமா மெனவே
குறிநீ யுனதாம் பவமே யொழிய
வருமே பிறவா நெறியா மதனை
மதியா தெதுவோ வறியா மையினுல்
மருளே வடிவா முயிரோ டுலகாய்
வரவாழ்ந் தனையே துயராய் மனனே. (38)

பொருளொன் றறிநன் றெனவே குறண்முப்
பொருளொன் றதனைத் தனியே சொனதை
முருகன் றனிவே லருள்கொண் டறிவார்
முனிநங் குருவா னறியுந் தரமென்
றுருவன் றருவன் றிருளன் றொளியன்
றுளதன் றிலதன் றெனநின் றதுவென்
றருளொன் றுருவா மனுபூ தியிலே
அருணை கிரிதா னுரைசெய் தனனே. (39)

எதுநா னெதுநா னெனுமா ராய்வா
லிதுவன் றிதுவன் றெனவே முடிவா
யதுவாம் பொருளே நானென் றுநித
மறியும் படிசொன் னதுநான் மறையே

பொதுவா யெதுமெய்ப் பொருளோ வதுதான்
புலனும் பொறியும் மனதொன் றுமிலா
திதுவென் றிடுகே வலசித் தினையே
யினிதா யறிவாய் குருவால் மனனே. (40)

பாடுங் கலைகள் பலவா யுணரும்
படியே மதிவந் ததையே நிலையென்
றோடும் மனமும் நிலையா மினிமை
யொருபோ தினுமே யடையா ததுவான்
நாடுந் தெளிவை யருட்போ தனையால்
நானே யதுவென் றதுவே நானென்
றூடும் மொழியாற் றெளிவாய் மனனே
அதுவே முடிவாங் குருசொற் படியே. (41)

வேறு

பண்டுரு வான வென்னைநீ யறியாப்
பவத்திலேன் கிடந்துழல் கின்றாய்
விண்டுமே யுலகை மெய்யென மருண்டு
வீணிலேன் துயரடை கின்றாய்
தண்டறை சுப்ப ராயனுங் குருதான்
தயவுட னளித்தமா வாக்யங்
கண்டதன் பொருளைச் சிந்தையில் வைத்தாற்
கவலைக ளொழிந்துபோம் நெஞ்சே. (42)

அறிவினிற் சிறந்து மன்புதான் மிகுந்தும்
அலைந்தலைந் துழல்வடை கின்றாய்
சிறுமையொன் றும லென்றுமே யின்பஞ்
சேர்ந்தசற் குருவினை யடைந்து

வறுமையோ ருருவ மாகியே தோன்றும்
மாயையை யுலகுயிர் பரமென்
றுறுதியாக் கொள்ளு முணர்வினை யகற்றி
உண்மையை நாடுவாய் நெஞ்சே. (43)

வேறு

திரமாம்பொரு ளறிவேயது தெரிவாயழி விலதாம்
பரமாமுல குயிராமுட லவையேபொரு ளலதாம்
ஒருவேதனை யுமிலாவடி வதுவேயுன துருவாம்
திரிபேயிலை மனமேயிது தெளிவாய்நனி தெளிவாய். (44)

வேறு

உரமதாம் பொருளை யடைவது தெளிவில்
உணர்வையோ குருவரு ளின்றிப்
பெருகியே வருமோ சுகம்நனி தோன்றும்
பிறவிதா னேயுமோ வுயிர்தான்
அருமறை யுபதேச மதுமொ ரெளிதி
லடையுமோ நெஞ்சமே யாய்ந்தால்
ஒருவித மான சாதனம் வேண்டாம்
உன்னைநீ யறிந்துகொள் வதற்கே. (45)

உன்னையே யறியா மூவித வவத்தை
உன்னையே மறைத்தவை தோன்றும்
முன்னிலே மறையு மூவித வவத்தை
மூயன்றொரு தினம்போலெந் நாளும்
பொன்னிலே யில்லாப் பணிபல நாமம்
பொன்னையே மறைத்தது போன்று
தன்னிலே தோன்றுக் கரணங்க ளெல்லாந்
தன்னையே மறைத்தது நெஞ்சே. (46)

வேறு

தனதுநிச மான வடிவுசுக தாகம்
சகலமதி லாகு முணர் குவாய்
நினதுசுக வாழ்வு வனுபவம தாகும்
நிதநி துயில்கால வளவிலே
எனையொழிய வேறு சுகமறிவு பேத
மிலையெனவு மாறி மனதிலே
தினமுமதை நாடி குருகிருபை யாக
சிதைவுகெடு மாறு நினைகுவாய். (47)

அறிவையறி யாது தினமுமறி யாமை
யதனைவெகு கால மறிகிறாய்
உறுதியில தாக நினைவுகலை வாக
உடலைநிலை யாக மலைகிறாய்
மறதியடி யோடு தொலையகுரு வாகு
மதியைமற வாமல் மனதிலே
பிறவிமுடி வாரும் வரையிலுனை நாளும்
பிரமசுக மாக வுணர்குவாய். (48)

வேறு

பெண்ணை மண்ணைப் பொன்னை நித்த
மெண்ணி நீயலைகிறாய்
உண்ணி னைந்து சிந்தை நொந்து
தண்மை யின்றி வேகிறாய்
திண்ண ஞானக் கண்ணை யன்றிப்
பின்னு மில்லை யொன்றுமே
எண்ணு வைநி சற்கு ருவாம்
விண்ணொளியை நெஞ்சமே. (49)

**வேறு**

அந்தவடி வென்றுமழி யாதசுக மாகும்நீ
எந்தவித மாகிலுமே யீதுடல மேகுமுன்
பிந்தவுயிர் துன்பமடை யாதவித நெஞ்சமே
சொந்தவுரு வானவொரு சோதியையுண் ணுடுவாய். (50)

**வேறு**

எத்தனை யுகமதாக வென்னசித் தாடினாலும்
பித்தினில் மருளத் தோன்றும் பிரமையே யுலகுபோல
அத்தியா ரோபமாக வருமறை வேதமோதும்
முத்தியை யடைவா யானால் முழுதுமே தெரியும் நெஞ்சே. (51)

**வேறு**

அறியா மையிலே கிடந்துநீ
அளவில் துயரே யடைந்தனை
பொறிவா யினிலே மயங்கியே
புவியா மிடரைப் பொருந்தினை
வெறியா முலகை விழுங்கியே
விதிமா லரனுந் தொடர்ந்துமேற்
குறியா நிலையை மகிழ்ந்து நீ
குருவா லறிவா யெனெஞ்சமே. (52)

அகமென் றுடலை நினைந்துமே
அளவில் வடிவம் மறந்துபோய்ச்
சகமும் முயிரும் பொருந்தியே
தனதின் பமதைப் பிரிந்துநீ
சுகமென் றுலகை மயங்கியே
தொலைவில் துயரில் வருந்தினுய்
பகலும் மிரவுங் கழிந்துமேற்
பரமா நிகழ்வா யெனெஞ்சமே. (53)

திருவரு ளுடைகுரு வடுத்துமே
    திகரடி கொடுசகம் விடுத்தியேல்
பருதுயர் நினைவதை நசித்துநீ
    பகலிர விலததில் சுகிக்கலாம்
கருவுறு தொழிலது தடுத்துமே
    கசியுட லுறவது கெடுத்தியேல்
பரசுக மெளிதினி லடுத்துநீ
    பதியுரு விதுவென நினைக்கலாம். (54)

பலவித மதமுன தகத்திலே
    பழகின மருளது புறத்திலே
உலகுயிர் பரமென நினைப்பிலே
    உனதுடல் சதமென மயக்கிலே
புலன்வழி யினிதென விருத்தியேல்
    பொருளுன துளமதி லிருக்குமோ
அலைமன மொருவழி நிறுத்தினல்
    அறிவது திருவுள முணர்த்துமால். (55)

வேறு

எப்பிறப்பு மெவ்வுலகு முற்றுநோக்கி
    னெல்லாமைம் பொறிவழியால் விளக்கமாகும்
இப்புறத்தில் விளக்குபொறி யதையுமாய்ந்தா
    லிறக்குமனம் நீக்கியொன்றுந் தெரிவதில்லை
சொற்பனம்போ லுள்ளமன மதையுமாய்ந்து
    தோன்றுபொரு ளெதுவென்றே மேனோக்கானுற்
கற்பனையா தொன்றுமிலா மறிவேதோன்றுங்
    காட்டுவா ரருட்குருவுங் காண்பாய் நெஞ்சே. (56)

கண்டபொருள் வசமாகு முன்னையே நீ
    காணது புறநோக்கி லகந்தை யோடு
மண்டலத்திற் பலவழியாய் நல்லோன் போல
    மயக்கமதை யனுசரித்து நின்றுயானல்

அண்டமது தோன்றுமிட மகமே யாக
வறியாமற் பிறவியிலே யழுந்தி யென்றும்
துண்டுதுண்டு நாமென்றே யுறங்கி யுண்டு
தொல்வினையாம் பெருந்துயர மடைவாய் நெஞ்சே

தொல்வினையி லழுந்திநீ யிருப்பா யானாற்
சுழலுகின்ற பிறவியுந்தா னேயு மோதான்
கல்வியள வில்லாமற் கற்றும் வீணாய்க்
காலமதைக் கடத்தலினா லோயாத் துன்பஞ்
சொல்லளவிற் போய்விடுமோ நெஞ்சே கேளாய்
சுருதிகுரு சுவானுபவ மறிவா யானால்
பொல்லாத கன்மனமுங் கரைந்து தேகம்
புவிவிழுமுன் னுண்மைபுலப் படுதல் மெய்யே(58)

பிறவியுனக் கேன்வந்த தென்றும் நீயார்
பிழையுலகந் தோற்றுவதின் மூல மென்ன
சிறையுடல மடைந்தவகைக் கேது வென்ன
சிற்சடமாய்த் தோற்றுவதே னென்று மிவ்வா
றறிவிலுனக் கையமிலா தெடுத்து ரைக்கு
மருட்குருவை யன்புடனே யடைந்து கேட்டால்
குறிகடந்து விளங்கு முன்னை நீயே கண்டு
கொண்டுபவங் கடந்தென்றும் வாழ்வாய்நெஞ்சே.

விளங்குகின்ற பகலிரவை மேலோ ரன்று
வேதமதிற் கற்பனையாய்க் கணமே யென்றும்
உளங்குறிக்கு நாழியென்றும் மணியே யென்றும்
ஒன்றிரண்டு நாளென்றும் வார மென்றும்
அளந்தறியு மாதமென்றும் வருஷ மென்றும்
அளவில்லா யுகமென்றுங் கற்ப மென்றும்
விளம்பினா ருலகவிவ காரம் நோக்கி
வெளிப்படையாய்ஜாலமாய்நடிக்கும் நெஞ்சே(60)

இப்படியே காலமதை முக்காலம்போ
　　லிக்கால மக்கால மோர்காலென்றே
கற்பனையா யுள்ளமதிற் பாவித்தேதான்
　　கடக்கவொண்ணு மாயையிலே கட்டுண்டென்றும்
மெய்ப்பொருளைத் தெரியாமல் மயங்குகின்றாய்
　　மேதினியிற் புத்திதடு மாற்றத்தாலே
கைப்பொருள்நெல் லிக்கனியை மறந்துமையோ
　　கலங்குவதேன் சற்குருவை யடைவாய்நெஞ்சே ()

ஒன்றுமே யெதுகாலு மில்லை யென்றும்
　　ஒழிவில்விளங் கும்முணர்வே யுள்ள தென்றும்
நன்றான விவ்வறிவே யினிமை யென்றும்
　　நானெனுஞ்சொல் மறைபொருள்தா னிதுவேயென்றும்
குன்றுதலுங் கூடுதலு மென்று மில்லாக்
　　குருவருளா லனுபவமாம் பொருளே யென்றும்
என்றுமே யிருந்தபடி யிருப்ப தென்றும்
　　இவ்வுறுதி யையமிலா துணர்வாய் நெஞ்சே. (62)

இவ்வுறுதி யையமிலா துணராவிட்டா
　　லென்றுமே யொழியாத பொருளிடங்கா
லெவ்வமதிற் கிடந்துழன்று திரிவாயையோ
　　வெப்பிறவி தோன்றினுமே யின்ப முண்டோ
தவ்வுதலாங் கரணமதைக் கடந்துளோங்குந்
　　தற்பரமாய் விளங்குமுன்றன் தனித்தரூப
மவ்விடமே காரியகா ரணங்களில்லா
　　வழியாத வானந்தம் விளங்கும் நெஞ்சே. (63)

அழியாத வானந்த மறியாதென்றும்
　　அல்லலாம் பிறப்பிறப்பிற் சுழன்றுமையோ
ஒழியாத மாயையெனுங் கடலிலாழ்ந்தும்
　　உன்னுருவா மகத்தான வெளியைவிட்டும்

இழிவான வெண்சாணு மாக்கையைநா
னெனதெனவே பாவித்து மிருக்கின்ருய்நீ
வழிபடுசற் குருவடைந்து துதிப்பாயாஞல்
மறைமுடிவா முணர்வெளியை யுரைப்பார் நெஞ்சே.

மறைமுடிவா முணர்வெளியே யுள்ளதென்றும்
மற்றதெலா மாயையனிர் வசனமென்றும்
அறையுமந்த வனிர்வசனத் தியல்பாராய்ந்தே
ஆன்றேரு மழிவில்லாப் பிரமமானுர்
இறையுருவ முலகுருவம் புறத்திற்றேன்றும்
இனிமையா மறிவொன்றே யகத்ததாகும்
நிறைவான அறிவுமய மொன்றேயென்றும்
நிலைத்ததனுல் நீயதுவா யுணர்வாய் நெஞ்சே. (65)

வேறு

உலகாம்பொருள் சடமாந்திர உணர்வாமிதி லிலையாம்
புலனும்பொறி வழியாலிது புவிபோலனு பவமாம்
தொலையாவினை யதிலேமதி சுழலும்படி வருமே
அலைவாமிது துயராஞ்சுக மறிவாயிரு மனமே. (66)

வேறு

வேதமோடுபு ராணமாதி விதித்துமேபொரு ளொன்றதாய்
வாதியாமத பேதமேயுன் மனத்துளேகுடி கொண்டுநீ
பேதைபோலெணி யேபலாதி பிரித்துமேதுய ரொன்றிஞய்
ஆதலாற்றுய ரானபேத மகத்திலேதளு நெஞ்சமே. (67)

வேறு

தள்ளியே யெல்லாத் தத்துவங் களையுந்
தனித்தனி யாய்ந்துமேற் சென்று
கள்ளமே யணுகா மயமதா யதனைக்
காரண காரிய வடுக்கா

லுள்ளமே மருவி யுணரில்நீ யன்றி
யொன்றுமே யிலையெனத் தோன்றும்
வள்ளலாங் குருவைத் துதித்துமே நின்றால்
மறைமுடி யுணர்த்துவார் நெஞ்சே. (68)

வேறு

சடமோ டிசைந்து மதியுஞ் சுழன்று
சனனம் புகுந்து திரிகிறாய்
துடரோ பிணிந்து வினையே புரிந்து
துயரே விரிந்து மலைகிறாய்
திடமோ டுகந்த குருவே யறிந்து
தெளிவே யுணர்ந்து நெஞ்சமே
சுடரோ டிருந்து பொறிவா யொடுங்கு
சுகமே யடைந்து மகிழுவாய். (69)

வேறு

இலக்கணமுந் தர்க்கமுமீ மாம்சை யோடு
மிலக்கியமு முதலான கலைகள் கற்றே
யலக்கணுறத் திரிகின்றா யல்லா துள்ள
மமைதியா யிருப்பதற்கு முடியு மோதான்
மலக்கணத்தை விட்டெறிந்து சுருதி யுக்தி
மதியதனு லனுபவத்தோ டிலங்கு நின்னைக்
கலக்க மிலாச் சற்குருவா லைய மின்றிக்
காண்பாயேற் கவலையெலா மொழியும் நெஞ்சே. 70

வேறு

செப்படி வித்தை போலவே தோன்றுஞ்
சிற்சட மானவிவ் வுலகை
மெய்ப்பொரு ளாக வைத்துமே யுள்ளில்
வேதனை யடைகிறாய் நெஞ்சே

கைப்பொருள் நெல்லிக் கனியது போலக்
கருத்தினுள் விளங்குநின் னுருவாம்
ஒப்புயர் தாழ்வும் ஒன்றினும் பொருந்தா
உணர்வையே யுளதென நினைவாய். (71)

வேறு

உளதே தெதுவென் றெவ்வொன் றினையும்
உணர்வா லதனை யாய்ந்தாய்ந் ததனுள்
அளவொன் றுமிலா வறிவே யுளதா
யதுவே யொளியா யழிவில் லினிதாய்
வளர்வா யதுவா யயர்வொன் றுமிலா
வடிவா யுனதாம் பவமே யொழியும்
பிளவென் றுமிலா தொளிர்வா யதுதான்
பேசா திடமா மறிவாய் மனனே. (72)

அறிவா முணர்வே புறநாட் டமதில்
அறியா மையினுற் பரமோ டுயிரும்
வெறியா முலகும் மவைபோ லொளிரும்
விதிமா லரனிச் சயமே விதுதான்
குறியோ டுரைசெய் தகநாட் டமதே
குலவும் மறைதான் பொருளும் மிதுவே
பிறிவொன் றறவே தெளிவா யுணர்வாய்
பிறவா நெறியே யடைவாய் மனனே. (73)

வேறு

அடைதலுக் கேதுவிலா அசத்துலகை யாராய்ந்து
கடையிலே நின்றொளிருங் கண்ணதனைப் பாராமல்
நடைவிலங் கன்னதென நாளெல்லாம் போக்குவையேல்
இடைவிடா வல்லலுனக் கென்றொழியும் நெஞ்சகமே. (74)

வேறு

என துயா னெனுஞ்செருக்கா மிரண்டையும் நோக்கி யுள்ளில்
தனிமையாய் விளங்கு ஞானத் தற்பர சொரூபந் தன்னை
யுன துண்மை வடிவ மென்றே யுறுதியாய்ப் பிடித்து நாளும்
இனிமையாய் வாழ்வா யானல் இனிப்பிறப் பில்லை நெஞ்சே. (75)

வேறு

பலநோக்கது துயரேயனு பவமாம்நன விதிலே
இலகும்பல வுருவேதுமில் லினிதாந்துயி லதிலே
புலனுங்கர ணமதாற்பல போகங்களு முளதாம்
இலையேவிது பொருளாய்த்துநீ இருப்பாய்தனி மனமே. (76)

பொருளல்லதைப் பொருளாகவே
புவிபோலனு பவிக்கும்
மருள்போம்வரை துயர்போம்வழி
வருமோவொரு பொழுதும்
இருள்போயினி மையதாகவே
இலகும்பொரு ளுணர்வே
அருளாமிது தெளிவாமறி
வகமென்றுணர் மனமே. (77)

வேறு

யானென்தெ னும்மனதி னுனசெருக் கோடே
யாவையுமி யற்றினழி யாததுய ராகும்
வானுணர்வு நாடுமன மோடுமிட மெல்லாம்
வாசனையி றந்தபடி யாற்றுயர மின்றும்
ஆனபடி யாலுமிது தேகம்விழு முன்னே
ஆகமதை யானெனவே யோருவதை விட்டு
ஞானவடி வானவனே நானவனே யென்று
நாடுநனி நாடுநனி நாடியிரு மனமே. (78)

வேறு

வேதமா முடிவா மூலகுயிர் பரமும்
வியாபக விளக்கம தான
போதமா முறுதி யெளிதினி லெவர்க்கும்
புலனுற விடயங்கள் நீங்கும்
நீதிசோ தனையின் முடிவிலே கமதாய்
நிகழ்வது பிரம்மமே யென்றும்
ஓதிய குருவி னருளினுல் விளங்கும்
உயர்சமம் தாழ்விலை நெஞ்சே. (79)

வேறு

எல்லாமு மெப்போது மாய்ந்து பார்க்கில்
ஏகவுரு வானபரப் பிரம மொன்றே
நில்லாத வுலகத்துக் காதி யென்றும்
நினைவிறந்த விடமதுவே நிகழுமென்றும்
அல்லையிலை யென்றுமா ரோப மான
அனைத்துமே தோன்றுமிட மதுவே யென்றும்
சொல்லாமற் சொன்னகுரு வருளா லத்தில்
சுயஞ்சோதி யாய்த்துலங்கி வாழ்வாய் நெஞ்சே.()

வேறு

யானென தென்னுஞ் செருக்கினை யாய்ந்து
யாதினை முடிவிலே யறிந்தாய்
ஈனமா மவத்தை மூன்றிடை விரவி
இலகுவ தெதுவெனத் தெரிந்தாய்
ஊனமா மாக்கை மூன்றையுங் கடந்தாங்
குளதுமற் றெதுவென வுணர்ந்தாய்
வானமாம் போத மறிவினை யுணர்ந்து
மதித்துநீ துலங்குவாய் நெஞ்சே. (81)

ஒருவடி வதனை விட்டுமே மற்றும்
ஒருவடி வதனையே யுள்ளம்
மருவுத லான வனுபவ நோக்கி
மதித்திரு வடிவையு மாய்ந்து
இருவுரு நடுவி லழிவிலா தொளிரு
மிரும்பொரு ளுணர்வெளி யதனிற்
குருவரு ளதனு லழுந்திநி யென்றுங்
குறைவிலா திலகுவாய் நெஞ்சே. (82)

வேறு

இந்தவெளி யேயுனது சொந்தநிலை யாகும்
யாதினை யடைந்துமடை யாதபொரு ளாகும்
எந்தவித மாகினுமுன் மந்தமதி நீங்கி
யேகவுரு வானவுணர் வானநிலை நாடி
வந்தவுடல் சொந்தமென பந்தமத மூத்தும்
மாயைமுத லான்பொருள் யாவுமில தென்றே
சந்ததமு மாய்ந்துமுடி வாயிலகுந் தன்னைச்
சாதனைசெய் தேயழிவு றாமலிரு மனமே. (83)

வேறு

அழிவுறு வறிவே நனவினிற் றால
வாக்கையை நானென மதிக்கும்
இழிவுறு வந்த வறிவது தானே
இலகிடுங் கனவினிற் சாயை
ஒழிவுறு வுணர்வே நித்திரை யதனி
லோய்ந்துபா ழினிமைய தாகும்
கழியமுன் றதனு ளிருந்துமே யொளிரும்
கருத்தினு ளாய்ந்தறி நெஞ்சே. (84)

கருத்தினு ளாய்ந்தா லறிவொன்று தானே
கனவிலு நனவிலும் விரிவா
யிருத்தலா லென்று மல்லலாய் விளங்கி
இருவித வவத்தையில் நடிக்கும்
பெருத்தவி மிவ்வீ ரவத்தையு மொடுங்கிப்
பெருகிய சுழுத்திவந் தெய்தில்
குருத்துவ மான வுளமது தோன்றும்
கூறொணச் சுகமதாய் நெஞ்சே. (85)

கூறொணு வமைவில் நின்றுமே நோக்கில்
குறைவிலா வெளியொளி தோன்றும்
வேறுவே றுக நடிப்பவை யெல்லாம்
வெளியொளி விகற்பமா யழியும்
ஈறிலா வுணர்வை யிருதயந் தன்னி
லிருத்திணு லிடைவிடாச் சுகமாம்
ஆறுத லான வவ்விரண் டொருமை
யழிவிலா தனுபவம் நெஞ்சே. (86)

வேறு

அழிவி லாதவ னுபவம் யாதெனில்
இழிவி லாவொளி தானறி வானந்தம்
ஒழிவி லாவெளி யாயில குமமது
மொழிய வேமுடி யாதுணர் நெஞ்சமே. (87)

வேறு

நித்தநித்தம் பெண்ணொடுநி நேசமாகி
நின்றுசுக மனுபவித்தா யஃதிவ்வாறென்
றித்தனை தா னுணர்த்துவையோ பிறகுக்கந்த
வின்பமதை நீயுணர்வதன்றி யதுபோல்

ஒத்தவுணர் விருதயத்தி லிருத்தியாங்கே
யுண்டாகும் பேரின்பச் சுகமீதென்ன
எத்தனைதான் நவின்றாலு முணர்தற்பாற்றோ
இஃதறிந்தால் சுவானுபவ மிலகும்நெஞ்சே. (88)

**வேறு**

அறிவொன் றேவிழிப் பாகும வத்தையில்
குறியென் றேயழி யாச்சுக தாகமாய்ப்
பொறிக டாம்வழி காட்டிநின் றேநிதம்
இறகு போலலை வாகுதே நெஞ்சமே. (89)

**வேறு**

அலைவாகு மவ்வறிவே யுறக்கந் தன்னில்
அசைவற்றுச் சுகவாழ்வை யடைந்து தூக்கங்
கலைந்தவுட னனவதுவுங் கனவுந் தோன்றிக்
கறங்குபோற் சுகதாக மடையு மையோ
நிலையிலா விவ்விரண்டு ளழியா தான
நிரதிசய சுகவடிவே யெல்லா மாகும்
தொலைவிலா யிவ்வொளியே துரிய மாகுந்
தோன்றியுந்தோன் றாதொளிரு முணர்வாய் நெஞ்சே ()

**வேறு**

ஒழியாமை யான வுணர்வாய் நிறைந்த
வொளியாய் விளங்கி யதுவே
யழியாமை நின்று மறையாம லென்று
மகமா யிருந்து மனதின்
தொழிலேது மின்றி சுகமா யமைந்து
சொலவொன்று மில்லை யெனவே
வழிகண் டறிந்த வறிவொன்றை நாடி
மகிழ்வுண்டு வாழ்நி மனமே. (91)

ஒருபோது மொன்று மிலையென்று வேத
மொழிவாக நின்று முடிவில்
தெருளா யுணர்த்த மகிழ்வா யடைந்து
செயலேது மின்றி நிறைவாம்
அருளா யிருந்த படியே யிருப்ப
தமைவே மிகுந்த சுகமாம்
குருவே யறைந்த படியே யுணர்ந்து
கொளல்வேண்டு மென்றும் மனமே. (92)

வேறு

சென்றுமே யருட்குருவை யடைந்து நீதான்
தெளிவாக வுபதேச முணர்வா யானல்
என்றுமே யிருந்தபடி யிருப்ப தான
விவ்வறிவே யுனதுநிச வுருவாம் வேறிங்
கொன்றுமே யெப்பொழுது மில்லை யென்று
மோதியநூல் முடிவறிந்து திடமாய் நின்றால்
அன்றுதா னுனதுருவம் வெளியாய்த் தோன்றி
யமைதியா யிருந்தசுக மறிவாய் நெஞ்சே. (93)

வேறு

நானுருல கேதென்றுனை நணிகண்டக முகமா
யூனோடுயிர் யாவுந்தளி யுணரப்படு முணர்வை
யேனோமதி யாமற்புற மிலகுந்துய ருடலைத்
தானெயெணி யோயாதலைந் தனைநீயறி மனமே. (94)

வேறு

ஏகவறி வானபரப் பிரம மொன்றே
எல்லாமா யிருத்தலைநீ நனவில் பார்த்தாய்
பாகமிலாச் சுழுத்தியதா மவத்தை தன்னிற்
பதைப்பற்று மல்லவுமா யிருத்தல் பார்த்தாய்

சோகமிலா திருந்தபடி யிருப்ப தான
சுகரூப மிவ்விரண்டி லழியா தாகும்
ஊகமனு பவவசன மூன்றுங் கொண்டே
உணருவாய் குருவருளால் உண்மை நெஞ்சே.(95)

அறிவுருவாய் நின்றபரப் பிரம மொன்றே
அனைத்துலக வல்லலென நனவிற் றோற்றும்
பொறிகரண முதலான கருவி யெல்லாம்
போயொடுங்கு மவத்தையதா முறக்கந்தன்னில்
வெறியுலகந் தோன்றாம லமைதி யாகி
வேறணுவு மில்லாமற் சுகமாய் நிற்கும்
குறிகளைநீ சுருதிகுரு வனுப வத்தாற்
கொண்டுள்ள மமைதிபெற வாழ்வாய் நெஞ்சே. ()

எத்தனையோ வடிவங்க ளுளத்தில் வந்தே
ஏகிமறைந் துடனுடனே யாது தோன்றும்
அத்தனைக்கு முளமிடமாய் நிற்ப தல்லா
லதுவாக வுளமொன்று மாகா தந்தச்
சித்துருவ மானவுள மாய்ந்து நோக்கிற்
சிந்தனையே யொளியுருவாய்க் காட்டுங் கண்ட
பித்தவுல கங்கரைந்து மிஞ்சி நின்றால்
பேதமிலாச் சுயஞ்சோதி யுணர்வாய் நெஞ்சே. ()

வேறு

நிதமும்தெருள் நிமிடந்தொறும் நிலைகண் டிலகியுமே
மதியும்பெற வுணரும்படி வழிகண் டறியாது
குதிகொண்டுல கதுவேயெணி கொடிதுந் துயரானாய்
ததிகண்டுநி குருகண்டிடில் தனிகண் டனைமனனே. (98)

வேறு

நானெனுஞ்சொல் லுக்குருவம் நாடிப் பார்நீ
நனவிலே தூலவுரு நானாய் நிற்பாய்
ஊனுருவ மறைந்துமே கனவு தோன்றில்
உண்மைபோற் சாயையுன துருவாய் நிற்பாய்
மானதமு மறைந்துசுக வடிவா மப்போ
மற்றொன்று மிலையெனநீ பாழாய்நிற்பாய்
ஆனதினா லிம்மூன்று வடிவாய் மாறும்
அறியாமைக் குயர்சாட்சி நீதான் நெஞ்சே. (99)

அறியாமை யுருவான மூன்று முன்னை
அறியாம லுனதுளே மறைந்து போகும்
அறிவாகு முனதுருவ மூன்றி னப்பால்
அத்தனைக்கு மிடமாகி யழியா தாகிக்
குறிகடந்த வெளியொளியா யினிமை யாகிக்
குருவருளால் விளக்குவதாஞ் சொரூப மாகி
இறவாத வுருவாகி யெல்லா மாகி
இருந்துவிளங் கும்பொருணீ இதுகாண் நெஞ்சே.

வேறு

நனவா மிதனிற் பொறிதங் கரணம் நானாவாய் வளரும்
கனவா மிதனிற் பொருள்போல் விரியுங் காட்சிகளா யிலகும்
மனமா மிதுவே மறையுந் தருணம் மாய்ந்தே பாழ்தோன்றும்
தினமா மனுப வமதாங் குருவால் தெரிவாய்நீ மனமே.(101)

வேறு

எத்தனை சுருதியாலு மெவ்வித யுத்தி யாலும்
பித்தினில் மருண்டு தோன்றும் பேதமை போகா தென்றும்
சத்திய வேத மோதி சற்குரு கிருபை யாலே
முத்தியை யடைவா யென்று மொழிவதை யறிவாய்நெஞ்சே.

வேறு

சொற்பனந் தனிலே தோன்றிடு முலகைச்
சொல்வையோ பொய்யென்றந் நிலையில்
கற்பனை யான சாக்கிர நிலையைக்
கண்டபி னதுபொய்யென் றுரைப்பாய்
உற்பவ மான வுலகிது மதுபோல்
உண்மையே யன்றெனத் தூரிய
தற்பர நிலையைக் கண்டலோ வுணர்வாய்
சாட்சிநீ யின்றறி நெஞ்சே. (103)

விளக்கொளி சிறிதே யாயினு மதனுள்
விரிசுடர் பரவினின் றிலகும்
விளக்குமங் கணைந்தால் விரிசுடர் நொடிக்குள்
விலகியச் சிறிதினு ளடங்கும்
துளக்கிடி லதுபோல் நமதுசிற் றுணர்வில்
துலக்குமிப் பெரிதுல கிலகும்
துளக்குமவ் வுணர்வங் கணைந்திடில் நீகாண்
துயருல கெங்குசொல் மனனே. (104)

நீருக்கு ளொருவன் நின்றங்கு கண்ட
நிலைமையை யுரைத்திட வென்றால்
பாருக்குள் வெளியே வந்தபி னன்றிப்
பகருவ தெங்ஙன மதுபோல்
ஆருக்கு முலகைப் பொய்யெனப் புகலல்
அரிதுகொல் லெனி னும்பொய் யுடலாம்
வேருக்குள் மயங்கி நிற்பது தெளிந்தால்
வெளியுரு நீயன்றோ நெஞ்சே. (105)

கண்ணொளி யிலையேல் காண்படு பொருளும்
கருத்தன்றிக் கருதலு மிலையால்
விண்ணொளி முதலாம் பூதமைந் துலகும்
விரிபுமைம் பொறியன்றி யுளதோ

மண்ணொளி யுருவம் மடமையின் நோக்கில்
மயங்கிடும் மெய்ம்மைபோ லானால்
தண்ணொளி விவேக நோக்கினால் பொய்மை
தானிது கண்டறி மனனே. (106)

வேறு

பெருங்காய மிட்ட பாண்டம் பெருமண மணக்கு மாபோல்
வருங்காய மிட்ட பாண்டம் வல்வினை வனுக்குங் கண்டாய்
தருங்காய முலகமெல்லாம் சடத்துவ மென்றுதள்ளி (107)
ஒருங்காயங் குணர்வொன்றேதா னுள்ளதென் றுணர்வாய் நெஞ்சே.

வேறு

ஆதலினா லெப்போது மிடைவி டாம
லதிதிடமா முணர்வுருவம் நானே யென்றுஞ்
சாதகமாய்ப் பழகியநா னுணர்வே யென்றுஞ்
சங்கற்ப விகற்பங்க ளனைத்து மென்றும்
பேதமிலா வகண்டவொளி யதுநா னென்றும்
பெருமையுட னகண்டசுக மனுப விப்பாய்
ஏதமிலிவ் வனுபவமே யெல்லோ ருள்ளத்
திருந்தபடி யிருப்பதுவா முணர்வாய் நெஞ்சே ()

வேறு

தோன்றி நின்றுமனு பவம டைபொருள்கள்
சோதனைக் கியைவ தின்றியே
ஊன்றி நோக்கு மொளி யேதன்னைத் தனிலே
உருவு போலவிளை விக்குதே
ஆன்றதா மறிவை விட்டு வேறுசுக
மனுப விக்கமுடி யாததால்
கான்ற சோறதென வுலகை விட்டுணர்வு
கண்டு ணீயிலகு நெஞ்சமே. (109)

வேறு

சகமோடுடல் பரமோர்டுயிர் சதமென்றெணி மலேவாய்
இகமோடுப ரமதாயொரு வினமாஞ்சல னமதாய்
நிகழும்முன து நுவார்மொளி நிறைவாயில குமதை
அகமாகவே யுணரும்வழி அறிவாய்தனி மனமே.(110)

வேறு

அழிவி லாதினிமை கருதி யொவ்வொருயி
ரடைய வேண்டுதலே நாடியே
ஒழிவி லாதமன மதிச மாதியதில்
உறைய வைத்து மறி வாளர்கள்
வழிய றிந்துவெளி யுருவடைந் துமுள
மதுதெ ளிந்துசுக முணருவார்
மொழிய வேதுமிலே யாவு மெப்பொ ழுது
முழுது மோனநிலே நெஞ்சமே. (111)

வேறு

சொல்லாப் பொருளுஞ் சொல்லும் பொருளும்
சொந்தப் பொருளு மிலே
கல்லாப் பொருளுங் கற்கும் பொருளும்
கல்விப் பொருளு மிலே
பொல்லாப் பொருளும் புகழும் பொருளும்
புன்மைப் பொருளு மிலே
எல்லாம் பிரமம் மெங்கும் பிரமம்
என்றும் பிரம மயம். (112)

அறிவானந்த நெஞ்சறி வுறுத்தல்
முற்றிற்று.

# ரிபு கீதை.

## 20-வது அத்தியாயம்.

அகண்டபரப் பிரமத்துக் கயலேயில்லை
அகிலமுமவ் வகண்டபரப் பிரமமென்று
மகண்டபரப் பிரமமது வகமே யென்று
மகமந்த வகண்டபரப் பிரமமென்று
மகண்டபர பாவனையே திடமாய்ச் செய்திவ்
வயலணுவுந் தோற்றும லழிந்த பின்பவ்
வகண்டபர பாவனையுஞ் செயாது தள்ளி
யானந்த வடிவாக வமர்ந்து நிற்பாய். (24)

உன்னியவவ் வாநந்த வடிவுந் தள்ளி
யுரமாக வொருவடிவே யாகிநிற்பா
யன்னியமி லொருவடிவென் பதையுந்தள்ளி
யதன்பின்பு நிர்க்குணமே யாகிநிற்பாய்
மன்னியவந் நிர்க்குணமென் பதையுந்தள்ளி
மனவாக்குக் கெட்டாத வடிவாய் நிற்பாய்
அன்னதையுந் தள்ளியபின் னறிவுமாத்ர
மாயதையு மிழந்தான்ம மாத்ரமாவாய் (25)

அன்னதையுந் தள்ளியபின் பிரமமாத்ர
மாயிடுவாய் மற்றதையுந் தள்ளியிங்கு
சொன்னவெலா மிழந்துவெறி தாகநிற்பாய்
சொன்னதையும் தள்ளிமிக வெறிதாய் நிற்பாய்
பின்னுளமே முதலியவோ ருபாதியின்றிப்
பேசவொணுச் சூனியமா நிலையினிற்பாய்
இன்னவித சூனியமு மிழந்தபின்ன
ரெவ்வடிவோ வவ்வடிவே யாகிநிற்பாய். (26)

நிற்பதெனுந் தன்மையுமே யிழந்த பின்னர்
நீயா யிருக்கின்ற சுபாவந்தன்னைச்
சொற்பமுமே வாக்காலு மனதினாலுஞ்
சொல்லவொணு தெண்ணவொணு தாதலாலே
தற்பரமாஞ் சகசநிலை சார்ந்த பின்னர்
தான்முனே தானுகத் தனித்திருப்பா
யற்பமுமே விகற்பமிலா வவ்விருப்பை
யறைந்திடவு நினைந்திடவு மார்தான் வல்லோர். ()

சொல்லியவிவ் விதமாக வனைத்துந் தள்ளிச்
சுத்தபர வடிவாகிச் சுயமாய்நிற்பாய்
அல்லதெலாந் தள்ளலுமே யகண்டமான
வகமெனவே யநவரத மநுசந்திப்பா
யெல்லையிலா வகண்டபரம் நானேயென்றிங்
கெப்போதும் பழகியவிவ் வநுசந்தானங்
கல்லெனவே திடமான நிருவிகற்பங்
கைவசமே யாகுவதிற் காரணங்காண். (28)

ஆதலினு லனைத்துக்கு மதீதமான
வகண்டபரப் பிரமமக மென்றெப்போதுஞ்
சாதகமாம் பாவனையே செய்தத்தாலே
சஞ்சலமாம் விகற்பமெலாந் தவிர்ந்தெப்போதும்
பேதமிலாப் பரப்பிரம ஞானியாகிப்
பின்னமிலாப் பரப்பிரம வடிவேயாவாய்
ஈதையலா லெளிதாக முத்திசார
வேறொன்று முபாயமிலை யிதுவே யுண்மை. (29)

# தத்துவஞானியே குருவெனல் மனிடா பஞ்சகம்.

ஒருதினஞ் சங்கரா சாரியன் காசியில்
உத்தம வீதியிற் சஞ்சரிக் கும்பொழு
தொருவன்சண் டாளவே டந்தரித் தங்ஙனே
யூனமில் லாவிவன் ஞானஞ்சோ திக்கவே
திரிதரும் போதவன் றன்னையங் கன்னவன்
திட்டியாற் கண்டுநீ யெட்டிப்போ போவெனப்
பரவிடும் வாக்கியங் கேட்டதற் குத்தரம்
பறையனுந் தேவன்முன் பகர்ந்ததைப் பகருவாம். (1)

அன்னமே யாதியாம் பஞ்சபூ தத்தினால்
ஆக்கிய வுன்னுடை யாக்கையைப் பற்றியிவ்
வன்னமே யாதியின் காரிய வாக்கையை
யணுகவொண் ணாதென வெட்டிப்போ வென்பதோ
பின்னமே தும்மிலாப் போதவான் மாவினைப்
பேணியான் மாவினைப் போவெனச் சொன்னதோ
பன்னிடும் பரமகஞ் சாச்சிரம யதிகளிற்
பரமனே யிவ்வித மென்றுநீ பகருவாய். (2)

அலையிலா வாரிபோற் சச்சிதா னந்தமா
மான்மவா காசமே யெங்கணு மசலமா
யெலையற நிற்கவிங் கந்தணன் புலையனென்
றிம்மகா பேதமெக் கலையினாற் கண்டதோ
விமலமாங் கங்கையி னப்பிலும் புலையர்தம்
வீதியி னப்பிலும் விம்பமாந் தன்மையா
னிலகுசொன் னக்குட மட்குடப் புணர்வினு
லிரவிவா னங்களி னேதுபே தஞ்சொலாய். (3)

சாக்கிரஞ் சொப்பன நித்திரை மூன்றிலுஞ்
சாட்சியாய்ப் பங்கய ஞதிதம் பாந்தமா
மாக்கைக டம்மிலுங் கோவையாய்ச் சாட்சியா
யச்சித்தி யாதொன்ரு காசமே போன்றிடுந்
தாக்கறுஞ் சித்ததே நானிந்தத் திரிசியந்
தானல வென்றுர நிச்சய முள்ளவன்
யோக்கிய வந்தண னீசன்ரு ஞகிலும்
முத்தவா சானென வென்மனே நிச்சயம். (4)

எந்தச்சித் துத்தனைத் தேவர்திர் யக்கொடு
விந்நர ரியாவரு மியானென வறிவரோ
வந்தச்சித் தொளியினுற் சடமன விந்திய
வாக்கையெப் புலனுமே சித்தென வொளிர்வதோ
வந்தமே கத்தினுன் மறைவதா மிரவிபோல்
வளர்கர ணங்களான் மறையுமச் சித்தினைச்
சந்ததம் பாவித்துச் சுகமுறு மியோகிதான்
சாதியா லாரெனுங் குருவெனு நிச்சயம். (5)

பிரமநா னென்னுடை மாயைமுக் குணமதாற்
பேதமாஞ் சகபர சீவகற் பிதமதாம்
பரமபூ ரணசிதா காசநா னேயெலாம்
பரமநா னுழியவோ ரணுவும்வே றின்றெனப்
பரசுக நித்தநின் மலநிரஞ் சனபரப்
பிரமநிச் சயவுர முடையனு ரோவவ
னருமையா மந்தண னீசன்ரு ஞகிலும்
அகிலவா சானென் வென்மனே நிச்சயம். (6)

குரவன்வாக் காற்சக நசுவரம் பிரமமே
குற்றமி னித்திய மென்றுராங் கூர்ந்துபின்
னுருமையாய் நாடொறு மிடையறப் பிரமமே
யுணர்ந்துதா னேதனிற் சாந்தமாஞ் சித்தனுய்ப்

மாங்கு



புரிந்தமுன் வினையினைப் பௌடிய வினையுடன்
போதமாம் வன்னியிற் றகனமே செய்துபின்
வருபிரா ரத்தத்துக் காக்காயை யொப்பித்து
வானம்போ னிற்பவன் குருவென நிச்சயம். (7)

எந்தவின் பக்கட லேசலே சத்தினு
லிந்திர னாதிய ரின்பமுற் றுள்ளவ
ரெந்தவின் பந்தனை யோகிகள் சாந்தமா
மிதயமீ தெய்தியே யின்பமே லாகினு
ரந்தவின் பக்கட லுள்ளடங் கும்மனத்
தன்மையோன் பிரமமே பிரமவித் தல்லமற்
றந்தத்தே வேசரும் வந்திக்கும் பாதனு
மன்னவன் குருவென வென்மனே நிச்சயம். (8)

---

உ

## சிவானந்த போதம்.

மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு
கல்லுண்டு மரமுமுண்டு
மனிதரிலு நீர்வாழுஞ் சாதியுண்டு
அநேககுல மனிதருண்டு
மனிதரிலு மனிதருண்டு வானவரு
மனிதராய் வருவ துண்டு
மனிதரிலே பிறப்பறுக்க வந்ததே
அருமையென வகுத்தார் முன்னோர். (3)

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

## விளம்பரம்.

ஸ்ரீசேஷாத்திரி சிவனுர் அருளிச் செய்த

# நாநாஜீவவாதக்கட்டளை.

சுத்தப் பதிப்பு.

இதில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் முதலிய பூதப் பிரிவுகளையும் அவை யாதியாய்த் தோன்றிய தத்துவந் தொண்ணூற்றுறனுள் ஞானதத்துவம், கன்ம தத்துவம் முதலிய உலக உற்பவ காரணங்களையும், சாதாரண ஜனங்களும் தெள்ளிதிலுணரக்கூடிய ஆரோப சித்திரப் படத்துடன் நல்ல காகிதத்தில் அச்சிடப் பெற்றிருக்கிறது.

விலை அணு 0—2—0

ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகள் அருளிச் செய்த

# கைவல்ய நவநீதம்.

சுத்தப்பதிப்பு.

இதில் வைராக்கிய டிண்டிமம், மோக்ஷ சாதானக் கிரமம், பிரமசித்தி அகவல், நிர்க்குண பூசை, சொரூபானு சந்தான துதி, பிரம வித்துக்களின் மகிமை, விவேக சட்கம் முதலியன அடங்கியுள்ளன.

பாக்கெட் சைஸ் விலை அணு 0—4—0

# பாரதவண்ணம்.

இது சந்தச்சிதைவு படாவண்ணம் பிரிக்கப்பெற்றுச் சுத்தப்பதிப்பாயச்சிடப்பெற்றது.

விலை பை 0—0—6

மாககத

உ

# விளம்பரம்.

திருத்துருத்தி இந்திரபீடம் ஸ்ரீ கரபாத்திர சுவாமிகள் ஆதீனம் ஈசூர் ஸ்ரீமத் சச்சிதானந்தசுவாமிகள் அருளிச்செய்த

## ஞானனுபூதித் திரட்டு.

சுத்தப்பதிப்பு.

இதில் வேதாந்த இலக்கணமும், அதிலடங்கிய பரநிலை குறி, மாயாநிலைகுறி, பந்தவிசார பஞ்சகிருத்தியம், விடுதி விசார பஞ்சகிருத்தியமும், சுவானுபூதி விநோத விளக்கம், பிரத்தியட்சானுபூதி விளக்கம், ஜீவகாருண்யவிளக்கம், சுவானுபூதி விநோத விளக்கம், உத்தமவாதம், திருக்குறிசிய விவேகமும் அடங்கியுள்ளன. நல்லகாகிதத்தில் அச்சிடப்பெற்றது. விலை அணு 0—10—0

## மாயாவிசித்திரத்தோற்றம்.

இது வசிட்டமுனிவர் ஸ்ரீ ராமபிரானுக்கு உபதேசித்தருளிய ஞானவாசிட்டத்தினது சாரசங்கிரகம்.

லீலை கதையும், புசுண்டர் கதையும் அடங்கியது.

இதை ஊன்றிப்படித்துணர்வார் உலகம் முதலியன ஒரு மித்தை எனக்கண்டறிந்தும் நித்தியமான தத்துவஞான உதயம் பெற்றும் உய்வார் என்பது திண்ணம். சாதாரண ஜனங்களும் படித்துணருமாறு தெள்ளிய நடையில் எழுதப்பெற்றுள்ளது. விலை அணு 0—3—0

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,
புக் ஷாப். புதுமண்டபம், மதுரை.